Tamil Nadu Agricultural University
Coimbatore – 641 003

Dr. E. Somasundaram, Ph.D.,
Public Relations Officer &
Professor (Agronomy)

Phone: 0422 - 6611302
Fax: 0422 – 2431821
E-mail: pro@tnau.ac.in

To
The Editor,

Date: 4-12-2013

Sir,

I request that the following matter may kindly be published in your esteemed daily:

## Sorghum Prices to Remain Stable – Sell upon Harvest

Sorghum (Sorghum bicolor) is a vital life-sustaining food crop for human being as well as for livestock in many parts of world. It is one of the major staple foods for the world's poorest and insecured people. It is emerging as the fourth most important crop after rice, wheat and maize. Sorghum is cultivated widely throughout the tropical, subtropical and temperate regions. It forms the staple diet of the poor people of the world located especially in Africa, Asia, America and Australia. In other countries it is used as fodder, cattle feed and as an industrial raw material.

In 2011-12 globally, sorghum was cultivated in area of 37.85 million hectares with a production of 58 million tonnes of grains with an average productivity of 1.53 tonnes per hectare. During the same period India had a total area of 6.32 million hectares under sorghum with a production of 6.01 million tonnes of grains with an average productivity of 950 kg/ha. In India, Maharastra (3.26 million hectare), Karnataka (1.14 million hectare), Rajasthan (0.55 million hectare), Madhya Pradesh (0.36 million hectare) and Tamil Nadu (0.20 million hectare) are the major sorghum growing states. In Tamil Nadu, sorghum is cultivated for grain and fodder purposes. Nutritionally sorghum grain contains about 10-12 per cent protein, 3 per cent fat, 70 per cent carbohydrate and 2 per cent crude fiber.

In Tamil Nadu, major sorghum growing districts are Dindigul (29.15 thousand hectare), Coimbatore (23.11 thousand hectare), Tiruchirappalli (25.05 thousand hectare), Salem (17.39 thousand hectare), Karur (16.05 thousand hectare), and Tirupur (11.97 thousand hectare). Tamil Nadu is the traditional home of the largest number of traditional sorghum varieties. The major landraces cultivated in Coimbatore and Tiruppur surrounding

areas are Periya manjal Cholam, Manjal cholam, Kari cholam, Karareddu cholam, CSH5, and Vellai cholam.

Sorghum can be grown in Kharif (July – November), Rabi (October –February) as well as summer (January- April) seasons. The area under the grain sorghum is gradually declining due to its low demand for food and low price. The area has come down from 7.2 lakh hectares in 1970-71 to 4.96 lakh hectares in 1998-99 and 1.98 lakh hectares in 2011-12. It is being replaced by maize in many districts, which gives higher return due to better market price. In many areas sorghum is raised as fodder crop.

Under these circumstances, back office of Agro Marketing Intelligence and Business Promotion Centre (AMI&BPC) in Centre for Agricultural and Rural Development Studies (CARDS), Tamil Nadu Agricultural University has analyzed the wholesale prices of cholam that prevailed during the last 10 years in Tiruppur regulated market to provide market intelligence for the major sorghum growing districts. Current price of sorghum is Rs.18.50 per kg. The back office of AMI-BPC analyses revealed that the price for the sorghum grains would be Rs.18-20 per kg during November-December 2013. Last year price during harvest was around Rs.16.50 per kg. Accordingly, farmers are advised to take up their selling decisions. There are limited chances for the prices to increase until February 2014. Hence farmers are recommended to sell sorghum upon harvest.

**For further details contact:**

Domestic and Export Market Intelligence Cell,
Centre for Agricultural and Rural Development Studies,
Tamil Nadu Agricultural University,
Coimbatore – 641 003.
Phone: 0422-2431405

**For Technical Details please contact:**

The Professor & Head,
Department of Millets,
Tamil Nadu Agricultural University,
Coimbatore – 641 003.
Phone: 0422-2450507

Public Relations Officer

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஏ. சோமசுந்தரம், பி.எச்டி,.
மக்கள் தொடர்பு அலுவலர் &
பேராசிரியர் (உழவியல்)

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 4-12-2013

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## சோளத்தின் விலை நிலையாக இருக்கும் அறுவடை செய்தவுடன் விற்கவும்

உலகின் பெருவாரியான பகுதிகளில் சோளம் மிக முக்கிய உணவுப் பயிராகும். இப்பயிர் உலகிலுள்ள ஏழைகள் மற்றும் பாதுகாப்பற்ற மக்களுக்கும் மிக இன்றியமையாத உணவாகும். நெல், கோதுமை மற்றும் மக்காச்சோளத்திற்கு அடுத்தபடியான நான்காவது மிக முக்கிய உணவுப் பயிராகும். வெப்ப, மித வெப்ப மற்றும் குளிர்பிரதேசங்களில் வளரக் கூடியது. ஆப்பிரிக்கா, ஆசியா, அமெரிக்கா மற்றும் ஆஸ்திரேலியா நாட்டு ஏழை மக்களின் இன்றியமையாத உணவு தானியப் பயிராகும். மேலும், இப்பயிரானது மற்ற நாடுகளில் கால்நடை உணவாகவும், தொழிற்சாலைக்களுக்கான மூலப்பொருள்களாகவும் பயன்படுத்தப்படுகிறது.

2011-12 நடப்பு ஆண்டில், சோளமானது உலகளவில் 37.85 மில்லியன் எக்டரில் பயிரிடப்பட்டு, 58 மில்லியன் டன்களை உற்பத்தி செய்தது. மேலும் இதன் உற்பத்தித்திறன் ஒரு எக்டருக்கு 1.53 டன்களாகும். இதே ஆண்டில் இந்தியாவின் சோளப்பயிர் பரப்பளவு 6.32 மில்லியன் எக்டராகவும், உற்பத்தி 6.01 மில்லியன் டன்னாகவும் மற்றும் உற்பத்தித்திறன் ஒரு எக்டருக்கு 950 கிலோவாகவும் இருந்தது.

இந்தியாவில் அதிகமாகப் சோளப் பயிரிடப்படும் மாநிலங்களாக மகாராஷ்டிரா (3.26 மில்லியன் எக்டராகவும்), கர்நாடகா (1.14 மில்லியன் எக்டர்) இராஜஸ்தான் (0.55 மில்லியன் எக்டர்), மத்தியப்பிரதேசம் (0.36 மில்லியன் எக்டர்) மற்றும் தமிழ்நாடு (0.28 மில்லியன் எக்டர்) விளங்குகின்றது.

தமிழகத்தில், சோளமானது உணவாகவும், கால்நடைகளுக்கு தீவனமாகவும் பயன்படுத்தப்படுகிறது. சோள தானியத்தில் 10-12 சதவீதம் புரதச்சத்தும், 3 சதவீதம் கொழுப்புச்சத்தும், 70 சதவீதம் கரிமச்சத்தும் மற்றும் 2 சதவீதம் நார்ச்சத்தும் அடங்கியுள்ளது.

தமிழகத்திலுள்ள, திண்டுக்கல் மாவட்டத்தில் (29.15 ஆயிரம் எக்டர்) பரப்பளவில் பயிரிடப்படுகிறது. மேலும் கோயமுத்தூர் (23.11 ஆயிரம் எக்டர்), திருச்சிராப்பள்ளி (25.05 ஆயிரம் எக்டர்), சேலம் (17.39 ஆயிரம் எக்டர்), கரூர் (16.05 ஆயிரம் எக்டர்) மற்றும் திருப்பூர் (11.97 ஆயிரம் எக்டர்) ஆகிய மாவட்டங்களில் பெருவாரியாக சோளம் பயிரிடப்படுகிறது.

தமிழ்நாடானது பாரம்பரிய சோள விதைகளின் தாயகமாக விளங்குகிறது. கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர் சுற்றுவட்டாரப் பகுதிகளில் பாரம்பரிய இரகங்களான, பெரிய மஞ்சள் சோளம்,

மஞ்சள் சோளம், காரிச்சோளம், காராரெட்டு சோளம், CSH5 மற்றும் வெள்ளைச் சோளம் போன்ற பாரம்பாரிய சோளப்பயிர் வகைகள், பெருமளவில் பயிரிடப்படுகிறது.

தமிழ்நாட்டில், இப்பயிரானது முக்கியமாக கரீப் பருவத்திலும் (ஜுலை – நவம்பர்), ரபி (அக்டோபர்- பிப்ரவரி) மற்றும் கோடைக்காலம் ( ஜனவரி- ஏப்ரல்) ஆகிய பருவத்திலும் பரவலாகப் பயிரிடப்படுகிறது. சோளப் பயிர் பயிரிடப்படும் பரப்பளவானது, வெகுவாக குறைந்து கொண்டே வருகிறது. இதற்கு காரணம், இப்பயிரின் தேவை குறைந்ததாலும், குறைந்த விலை போன்றவைகளே ஆகும். மேலும், இதன் பயிர் பரப்பளவு 1970-71ல் 7.2 இலட்சம் எக்டரில் இருந்து, 1998-99ல் 4.96 இலட்சம் எக்டராக குறைந்து மற்றும் 2011-12ல் 1.98 இலட்சம் எக்டராக குறைந்து விட்டது. இவ்வாறு குறைந்து விட்ட பயிர் பரப்பளவில், மாற்றுப் பயிராக அதிக இலாபம் தரும் மக்காச்சோளம் பயிரிடப்படுகிறது. பல பகுதிகளில் சோளமானது தீவனப் பயிராகவே பயிரிடப்படுகிறது.

இந்த சூழ்நிலையில், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் இயங்கும் வேளாண் விற்பனைத் தகவல் மற்றும் வணிக ஊக்குவிப்பு மையத்தின் பின்புல அலுவலகம், கடந்த 10 வருடங்களின் திருப்பூர் மொத்த சந்தையில் நிலவிய சோளம் விலை விபரங்களை ஆராய்ந்தது. ஆய்வின் முடிவில் வருகின்ற நவம்பர் முதல் டிசம்பர் மாதம் வரை சோளம் விவசாயிகளுக்கு ஒரு கிலோவிற்கு ரூ.18-20 கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த வருடத்தின், இதே மாதத்தில் (நவம்பர்-டிசம்பர்) விலையானது ஒரு கிலோவிற்கு ரூ.16.50 ஆக இருந்தது. தற்போதைய விலையானது ஒரு கிலோவிற்கு ரூ.18.50 ஆக உள்ளது. வருகிற பிப்ரவரி மாதம் 2014ல் விலை குறையவும் வாய்ப்பு இருக்கின்றது. எனவே, விவசாயிகள் அறுவடையான சோளத்தை விற்பனை செய்யுமாறு பரிந்துரைக்கப்படுகின்றனர்.

<u>மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ள</u> :-

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம் ,
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர்-641 003.
தொலைபேசி: 0422-2431405

<u>தொழில்நுட்ப விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்</u> :-

பேராசிரியர் மற்றும் தலைவர்,
சிறு தானியங்கள் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர்-641 003.
தொலைபேசி எண்: 0422-2450507

மக்கள் தொடர்பு அலுவலர்